கலாசிந்தாமணி

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
—திருக்குறள்

புத்தகம்	பிங்கள௵ மாசி௴	சஞ்சிகை
3	பிப்ரவரி௴ 1918	5

கடவுள் வணக்கம்.

அருள்பழுத்தபழச்சுவையே கரும்பேதேனே
யாரமிர்தேயென்கண்ணே யரியவான
பொருளனைத்துந்தரும்பொருளே கருணைநீங்காப்
பூரணமாய்நின்றவொன்றே புனிதவாழ்வே
கருதரியகருத்ததனுட் கருத்தாய்மேவிக்
காலமுந்தேசமும்வகுத்துக் கருவியாதி
விரிவினையுங்கூட்டியுயிர்த் திரளையாட்டும்
விழுப்பொருளேயான்சொலும்விண் ணப்பங்கேளே.

—தாயுமானவர்.

உள்ளமோவொன்றினில்லா தோசையிலெரிநின் றுண்ணும்
கொள்ளிமேலெறும்புபோலக் குழையுமாலென்றனுள்ளம்
தெள்ளியீர்தேவர்க்கெல்லாம் தேவராயுலகம்கொண்ட
ஒள்ளியீர் உம்மையல்லா லெழுமையும் துணையிலோமே.

—நாலாயிர பிரபந்தம்.

ஊரிலான்குணங் குறியிலான்செயலிலானுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான்பின்னிலான்பிறிதோர்
சாரிலான்வரல் போக்கிலான்மேலிலான்றனக்கு
நேரிலானுயிர்க் கடவுளாயென்னுளேநின்றான்.

—கந்த புராணம்.

பிங்கள௵ மாசி மீ

1918௵ பிப்ரவரிமீ மார்ச்சுமீ

		குரு.	கே.
	டிசம்பர்மீ 15உ சக்ராசி சக்கரம்.		ச.
சுக்.			
ர.ரா. பு.			கு.

உத்தராயணம் சிசிரருது	பசலி 1326 1327	சாலி 1840
கொல்லம் 1092.	கலியுகம் 5019	ஹிஜரி 1335

யோகம்.	இங் மீ.	தமிழ் மீ.	வாரம்.	தி, நக்ஷத்திரம், முதலியன.
ம	12	கும்பம்-மாசிமீ 1	செவ்	பிர 13-3, சனி 43-50. பஞ்16-26, பா 38-27.
நா	13	2	புத	துவி 3-59, பூசம் 36-42,சிவ 5-52, தை29-25.
சி	14	3	வி	சதுர் 46-57,உத்தி 30-11, சா 45-55,வ20-52
அ	15	4	வெ	பஞ் 40-0, ரேவ 24-42, சுப 37-11, பவ13-18
சி	16	5	சனி	ஷஷ் 34-30, அஷ் 20-30,சுப் 29-37,கவு7-3.
பி	17	6	ஞா	ஸப் 30-37, பஞ் 17-56, பி 23-20, கர 2-20.
ம	18	7	திங்	அஷ் 28-30, * கிரு 17-5,மா 18-28,பா 58-6.
அ	19	8	செ	நவ 28-6, ரோ 17-55, வை 14-58,தை 58-30.
சி	20	9	புத	தச 29-18, மிரு 20-19, வி 12-42, க 29-18.
ம	21	10	வி	ஏகா 31-52, திரு 24-5, பி 11-34,வ 0-25.
சி	22	11	வெ	துவா 35-33,புன 28-58,ஆயி 11-20,பவ 3-35
சி	23	12	சனி	திரி 40-5, பூச 34-42. ஸ 11-51, கவு 7-43.
ம	24	13	ஞா	சதுர் 45-19,ஆயி 41-5,சோ 12-55,கர 12-28
ம	25	14	திங்	○ பௌள 51-2,மக 47-56, அ 14-26,பத்18-7.
சி	26	15	செவ்	பிர 57-5,பூர 55-7, சுக் 16-15,பா 24-1.
அ	27	16	புத	துவி 60-0, உத் 60-0, திர 18-18,தை 30-12.
ம	28	17	வி	துவா 3-20, உத் 2-30, சூரி 20-27,வ 36-29.
அ	1918-மார்ச்சுமீ 1	18	வெ	திர 9-34, ஹஸ் 9-53, கட 22-33,பவ 42-37.
ம	2	19	சனி	சதுர் 15-32, சித் 17-1, விசா24-26,கவு48-2
சி	3	20	ஞா	பஞ் 20-56, சுக் 23-34, து 25-48, கர 53-16.
ம	4	21	திங்	ஷஷ்டி 25-16, விசா 29-9,வி 26-25,ப 56-56
சி	5	22	செ	ஸப் 28-13, அனு 33-21, ஹ 25-56,பா 59-2
சி	6	23	புத	அஷ் 29-25, கேட் 35-50, வ24-9,தை 59-15
சி	7	24	வியா	நவ 28-36, மூல 36-22, வி 20-49,வ 57-24.
பி	8	25	வெ	தச 25-41,பூரா 34-53, வி 15-51, பவ 53-30.
நா	9	26	சனி	ஏகா 20-48, உத் 31-25, வ 9-16, கவு 47-40.
அ	10	27	ஞா	துவா 14-7, திர 26-14, ப 1-11, கர 40-12.
சி	11	28	திங்	திர. 5-58, அசு 19-42, சித் 41-34,பத் 31-30.
ம	12	29	செ	● 47-3, சத 12-15, சா 30-41, சது 21-57, அமாவாசை தற்பணம்
அ	13	30	புத	பிர 37-15, பூசம் 4-23, சுப 19-37,கிம் 12-7.

சூரியன்

சூரியன் உருவத்தில் கோளவடிவமானதாக இருந்தாலும் அது நமது வெறுங்கண்ணுக்குப்பட்டையான வட்டம் போலக் காணப் படுகிறது. சூரிய பிம்பத்தின் விட்டமானது ஒருநேர் கோணத்தின் நூற்று எண்பதில் ஒருபாகமாக நமது கண்ணுக் குப் புலப்படும். பூமிக்கும் சூரியனுக்கு முள்ள தூரம் (92,000,000) ஒன்பதுகோடியே இருபது லக்ஷமயில் என்று வான சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்றவர்கள் எழுதியிருக்கின்றார்கள். சூரியனுடைய குறுக்களவாகிய, விட்டம் (8,50,000) எட்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் மயில்.

பூமியின் குறுக்களவு எண்ணாயிரம் மயிலானதால் சூரியனு டைய விட்டம் பூமியினதைவிட நூற்றெழுபது மடங்குச் சற்று அதிகமென்று ஏற்படுகின்றது. சூரியனுடைய மொத்தம் பரு மன் பூமியிலும்(12,50,000)பன்னிரண்டரைலக்ஷம் மடங்குஅதி கமாகும். சூரியமண்டலத்தைச் சேர்ந்தமற்ற எல்லாக்கிரகங்க ளின் மொத்த கனத்திலும் சூரியன் (900) தொள்ளாயிரம் மடங்கு அதிகம். சூரியகோளத்தின் முழுமையுஞ் சேர்ந்த கன அளவு பூமியிலும் (300,000) மூன்று லக்ஷமடங்கு அதிகமாம். 12½-லட்சம் பூமியை நாம் ஒன்ருய்ச் சேர்த்துப் பார்த்தால்அது சூரியனின் பரிமாணத்துக்குச் சரியாகும். அப்படியே 3-லக்ஷம் பூமியைச் சேர்த்து நிறுத்தால் அது சூரியனுடைய கனமாகும்.

சூரியன் அக்கினி மயமான ஓர்பெரிய உருண்டையே யாம். சூரியனுடைய உஷ்ணத்தை இவ்வளவு என்று அளவிட்டுச்சொல் வது அஸாத்தியமே யாம். அதற்கு நிகரான உஷ்ணம் வேறொ ன்று மில்லை. அதின் உள்ளும் புறமும் அதிக உஷ்ணமான அக் ணிமேக மயமாக இருக்கும். ஆதலால் சூரியனில் ஒன்றேனும் கனபதார்த்த மில்லாமல் எல்லாம் உருகிய வெள்ளாவிதான்.

சுக்கிரன் செவ்வாய், சனி, வியாழன், புதன் முதலிய கிர கங்களெல்லாம் நாம் வசிக்கின்ற ஒருகிரகமாகிய இந்த பூமி யைப் போலவே கெட்டியாகவும் ஆறிக்குளிர்ந்தனவாகவும் சூரி யனுடைய பிரகாசத்தினலன்றி தாமாகப்பிரகாசிக்குந் தன்மை இல்லாதனவாயும் சூரியனுடைய ஒளியைக்கொண்டே தாங்கள் ஒன்றுக் கொன்று தீபம்போல அறியத்தக்கனவாயு மிருக்கின் றன. ஒருதூர திருஷ்டிக் கண்ணாடியால் சூரியனுடைய அதிக

மானகாந்தி தணியும்படிச் சாயம் பூசிய கண்ணுடியைத் துணையாக வைத்துக் கொண்டு சூரியனைப் பார்த்தால், அதின் மத்தியில் பற்பல கருப்புப் புள்ளிகளைப் பார்க்கலாம். அவைகளின் மத்திய பாகம் இருண்டு அந்தகாரமாயிருக்கும். அந்தப்புள்ளிகளின் குறுக்களவு 100-மயில் முதல் லக்ஷம் மயில் வரையிலுமிருக்கு மென்று வான சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

சூரியனும், இந்தப்பூமியையும் மற்றக் கிரகங்களையும்போலவே தன்னைத் தானே ஆத்மப்பிரதக்ஷிணம் செய்து கொண்டிருக்கிறது. சூரிய பிம்பத்தில் மேற்சொன்ன புள்ளிகளில் ஏதேனுமொன்றைக் குறிப்பாகப் பார்த்து வருவோமாயின் அது ஒரே பக்கத்தில் தோற்றுமல் காலக்கிரமத்தில் சூரியன் சுழலுங் காரணத்தால் சூரிய பிம்பத்தின் கிழைக்கோடியிலே தோன்றிய புள்ளி சுமார் இரண்டு வாரத்திற்குள்ளே அதன்மேலைக் கோடியில் காணப்பட்டு மீண்டும் அதே காலத்திற்குள் முன்னிருந்த இடத்திற்கே வருவதைக் காணலாம்.

இவ்வாறு சூரியன் ஒருமுறை தன்னைத் தானே சுற்றிவரச் சுமார் 25-முதல் 27-நாள் ஆகிறதென்பதை ஊகித்தறிந் திருக்கிருர்கள்.

சூரியபிம்பத்திலுள்ள புள்ளிகளெல்லாம் மிகவும்ஆழமான சுழல்போன்ற பள்ளங்களாம். அவை சூரியனுடைய மேற்புறமிருந்து உள்ளே அகாதமாகத் தொலைதூரஞ் செல்லும். அவற்றுள் ஒன்றின்வடிவமட்டும் அப்படியே ஒளிச்சித்திரப்படமெடுத்தபடி யிருக்கிறதைக் காணலாம். அந்தப்புள்ளிகளுக்குள் வாயுவும் கானலாவியும் கலந்திருக்கின்றன. பள்ளங்களினுள்ளே போகப்போக உஷ்ணங் குறைந்திருப்பதனல் வெளிச்சங்குறைந்து இருளடைந்திருக்கும். இவ்வாறு சூரியனில் தோன்றுகிற களங்கத்தின் காரணம் இன்னதென்று இன்னமும் எவராலும் நிச்சயமாக அறியப்படவில்லை; ஆயினும் சூரியனின் மேற்புறத்திருக்கும் வாயு கீழே செல்லும் வேகததினல் உண்டாகின்றனவென்று நினைக்கிருர்கள். இப்புள்ளிகள் சூரியனின் வடகோடியிலும், தென்கோடியிலு மல்லாமல் மத்திய பிரதேசங்களில் பெரும்பான்மையாய்த் தோன்றும். இந்தப் புள்ளிகள் குப்பல் குப்பலாகக் காணப்படும்.

பெரிதான புள்ளி ஒன்று சிற்சில சமயங்களில் உடைந்து பல சிறுபுள்ளிகளாக மாறிவிடுவது முண்டு. இந்தப்புள்ளிகளெல்லாம் அடிக்கடி உருமாறி இடம் விட்டு இடம் பேருவது முண்டு. இந்தக் கால வரையறைக்குக் காரணம் இன்னமும் நன்ருய்த் தெரிய வில்லை. (தொடரும்.)

கல்வி

இவ்வுலகின் கண்ணே மானிடப்பிறவி பெற்ற மாண்பினை யுடையோர் அடைதற்பால பெரும் பேறுகள் நான்கு. அவை தாம் அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இவற்றின்பாகு பாடுகளை அருந்தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார்,

ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல் மனையாளும் காதலனும்-தீதின்றிப்
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தனர். இந்நால் வகைப் பேற்றினுள் முன்கூறிய மூன்றும் இம்மையினும் ஈற்றது ஒன்றும் அம்மையினும் அடையத்தக்கனவாம். இப்பேறு கள்நான்கினையும் ஒருவனுக்கு முட்டின்றிமுடிக்கவல்லது செல்வமே. அச்செல்வம் கல்வியும் பொருளுமென இருவகையாம். இவ்விரண்டினுள்ளும் கல்விச்செல்வம் எவ்வுயிர்க்கும் உறுப்பி றச்சிறந்த கண்ணேபோல், மக்களனைவர்க்கும் இன்றியமையாத அருங்கலனைப் போற்றத் தகும். இது,

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல-நெஞ்சத்து
நல்லம்யாமென்னு நடுவுநிலைமை யாற்
கல்வியழகே யழகு. என்னும் நாலடியாராலும்,

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்-உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க்குற்ற துணை. என்னும் நீதிநெறிவிளக்கத்தாலும்,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

"கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே"

"எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்"

என்னும் மூதுரையாலும்,

வெள்ளத்தாற் போகாது வெந்தணலால்
வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவொழியக் குறையாது
கள்ளர்க்கோ மிகவரிது காவலோ
மிகவெளிது கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க வுலகெலாம்
பொருள்தேடி யுழல்வதேனோ? என்பதாலும்,

கல்வியே நல்லுயிரைக் காப்பதற்கு நற்றுணையாம்
கல்வியே நல்லுடம்பைக் காப்பதாம்-கல்வியே
செல்வப்பொருளின்பஞ்சேர்க்குந் தலைமைசேர்
செல்வமாஞ் செய்யுஞ் சிறப்பு. என்றும்,

கல்வி யறிவுதருங் கற்பை நிலைநிறுத்தும்
இல்வாழ் வுக்கேற்ற இசைவெல்லாம்-சொல்லிக்கும்
இந்நிலத்து மேன்மையெல்லா மெய்துவிக்கும் முத்தியெனும்
அந்நிலத்துக் குற்ற துணையாம்.

என்னும் பெண்மை நெறிவிளக்கம் அறிவுறுத்துவதாலும் வெள்ளிடை மலைபோல் விளக்க முறும். மற்றும்,

'அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்,' என ஆன்றோர் கூறியபடி, பொருளுடையோனும் கல்வியுடையோனைக் காதலிக்கின்றான். இது கொண்டு,

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னற்குத்
தன்தேயமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. என்னும் உறுதிமொழியை வலியுறுத்தும் வரலாறு ஒன்றினை இங்குவரைவாம்.—

(இன்னும் வரும்.)

பி. பரிமணப் பல்லவராயர்,
போர்டு ஸ்கூல் உபாத்தியாயர், உத்தம சேரி.

நாம் ஒழுகவேண்டிய நெறிகள்

(127-வது பக்கத்தொடர்ச்சி)

நன்னெறிவழியும் தீநெறிவழியும் மனதைச் செலுத்துபவன் மனிதனேயாகையாலும், ஒவ்வொருவனும் அதை நல்வழியிலிருத்துவது சாத்தியமே யாகையாலும், நல்ல கல்வியால் விளையும் வினைகள் உலகோபகாரார்த்தமாகவே யிருக்கின்றன. கெட்டவழியில் மனதை விடாதகாலத்து இவ்வளவு இன்பமிருக்க, சிலரறியாமையா லடையுந் துன்பத்திற்காகப் பெரும்பாலார் பெறும் பெரும்பயனைப் பெறாதிருக்கச் செய்வது பேதைமையே. கல்வியே யில்லாவிட்டால் பத்திரிகைகள் வருவதெங்கே? நமக்கு அறிவு பிறப்பதெங்கே? உலகவிசாரணை தானெங்கே? ஒவ்வொருவரும் கற்காதிருந்தால் பெரியாரைப் பின்பற்றத் தெரிவிப்பவன்தா னெங்கே? எல்லாம் இருள் மயமாயன்றோ முடிந்து விடும். ஆகவே, இம்மானுடப் பிறப்பெடுத்ததின் நோக்கமும் நிறைவேற வழியுமில்லை. இதை முன்னிட்டன்றோ நாயனார்,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபி
ன்நிற்கவதற்குத் தக" என்று பசுமரத்தாணிபோற் றம் குறளிற் பதிப்பித்துள்ளார்.

இன்னும், கற்றோரையும் கல்லாதாரையும் தரம் பார்க்குங்கால் கற்றோரே ஒவ்வொரு விஷயத்திலும் மேன்மை யுறுகின்றனர். கல்லாதாருக்கு என்னவிருந்தும் அவைகளொன்றும் நற்பயன் தரத்தகாதவைகளாகவே யிருக்கின்றன. புத்திமானே பலவாறுகையால் என்ன இடர் வரினும், ஒருவன் கல்வியைக் கைவிடாமல் மேன்மேலும் விருத்தியடையச் செய்வதோடு, கற்குந்தோறும் நூல்களைக் கசடறக்கற்று, அவைகளிற் கூறிய விலக்குகளை விலக்கி, விதிகளைத்தழுவி, நற்பயனடைவதற்காகவே கல்வியுண்டாயதெனலாம். இதை,

"கற்றதங் கல்வியுங் கடவுட் பூசையு
நற்றவ மியற்றலு நவை யிறனமு
மற்றுள வறங்களு மனத்தின் பாலழுக்
கற்றவர்க்கே பயனளிக்கு மென்பரால்" (காசிகண்டம்.)

என்பதானுணர்க.

ஈகை:— முற்கூறிய முக்குணங்களும் இம்மை மறுமையினு முதவுகின்றன வாயினும், மறுமைப் பயனைப் பயப்பித்து வீட்டிற்குச சாதனமாயிருப்பது ஈகையாகையால், இதைப்பற்றி நாம் கவனிப்பது அத்தியாவசியமே. தரித்திரருக்குத் தம்மாலியன்றவைகளைத் தந்து அதன் பயனாக அவர்களிடத்திற் பிரதியுபகாரம் பெறாதிருத்தலே ஈகையாகும். நாம் பிற்காலத்தில் அவர்களால் நன்மையடையலாம் என்று எண்ணி மற்றவர்களுக்குக் கொடுத்தாலும் அது ஈகையாகா, கடன்கொடுத்து வைத்திருப்பதற்குச சமானமே யாகும். கடன் கொண்டார் எப்படிப் பணத்தைத் திருப்பித்தரத் தக்கவர்களா யிருக்கின்றனரோ, அதே மாதிரி ஈகைய ஏற்றுக் கொண்டாரும் இட்டாருக்கு அநுகூலம்செய்ய முயலுவார்களாகையால் அவர்கள் பிற்பயன் அடைய ஏதுவில்லாமற் போகின்றது. இருப்பினும்,

"நல்லா ரொருவருக்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப் போற்காணுமே-யல்லாத
ஈரமில்லா நெஞ்சத் தார்க்கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர்." (மூதுரை) என ஆன்றோர் அறிவுறுத்தியபடி, நல்லார் தான் தாம் பெற்றதைத் திருப்ப முயலுகின்றனர்; ஆனால், ஈரமில்லாத நெஞ்சத்தார் அப்படிச் செய்வதில்லையே; ஆகையால் அவர்களுக்கு ஈவதால் நமக்கு மறுமைப்பயன் கிடைப்பதிற்றடை யென்னையோ வெனில், அத்தகைமையருக்குக் கொடுப்பவர்கள், அவர்களைத் தங்களாற் கூடியவரை கஷ்டப்பட்டு வயிறு வளர்க்கச்செய்யாமல் சோம்பேறிகளாய்க் கெட்ட வழிகளில் நடக்கச்செய்யவும் காரணராக விருத்தலான் அவர்களுக்குக் கொடாமலிருத்தலே நலமாகும். ஆதலாற்றான்,

"வறியார்க் கொன்றீவதே யீகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்று நாயனாரும் தெரிவிக்கின்றார்.

ஈகையின் தன்மை யிப்படியாயினும், அதை இவ்வுலகில் இருதறமுமன்றி முத்தறத்திலு முபயோகிக்கிறார்கள். வறியாருக்கு வழங்குவதிலேயே இருபிரிவும், ஏனையோரை யேத்துவதில் ஒருபிரிவும் ஆகமுப்பிரிவுகள் பெற்றது ஈகை. இம்மூன்றிலும் எது சிறப்புறும் என்று உணர்ந்து அதனைக் கடைப் பிடிப்பது நம் நோக்கமாகையின், இவைகளின் வேறுபாடுக ளென்னவென்று விசாரிப்பாம்.

இப்பிரபஞ்சத்தின் கண் நாம் அடையும் ஒவ்வொரு தொழிலின் மறுமைப் பயனும் நம் கருத்திற்குத் தக்கவாறே யாகையால், மனம் சுத்தியாயிருப்பது அத்தியாவசியமே.எப்படி யெனில், தன் எதிரியை நஞ்சிட்டு நாசப்படுத்த எண்ணி யவ்வாறே செய்த ஒருவனுக்கு, முன் ஏதோ வியாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த விரோதி விஷப்பிரயோகத்தால் ரோகம் நீங்கி சுத்த சௌந்தரிய வானாயினும், நற்பலன் கிட்டுவது அசாத்தியமாவது போலவும், நல்ல மனதோடு ஓர்காரியத்தைச் செய்ததனால் உபகாரம் பெறுபவனுக்கு அகஸ்மாத்தாய் அபகாரம் விளைய,நற்காரியம் செய்ய நினைத்தவனுக்குத் தூர்ப்பலன் நேராதது போலவும், தரித்திரருக்கு ஈவதிலும் இருவிதப் பலனுமடைவார்பலர்.

இரப்போருக்கு இல்லை யென்னாது ஈயும் இயல்புடையார் ஒருபகுப்பினரும், ஒருவர் கொடுக்கும்பொழுது தாம் கொடாமலிருத்தல் நல்லதல்லவே என்று யெண்ணி,பெருமையின் கருத்துக்கொண்டு வறியோர்க்கு வழங்கும் வரம்பினர் ஒரு பகுப்பினரும், ஆக தரித்திரருக்குத் தானந் தருபவரிலேயே இருபிரிவினராகின்றனர். இவர்களில், முதற்பகுப்பினரைச் சார்ந்தவரே மேம்பாடுடையார். அவர்கள் தான் ஈகையின் தன்மையை யினிதுணர்ந்தவர்கள். அவர்கள் பெறும்பேறே பெரும்பேறாகும். ஆனால், இடைப்பட்டவர் இடிபட்டவர்களே யாவர். அவர்கள் சுய நலங்கருதி ஈவதால், மற்றையோருக்கு அவர்கள் உதவியுடையாராயிருந்தாலும், மனச்சுத்தி யின்மையால் அவர்களுக்கு நல்ல பலன் எப்படிக் கிடைக்கும்? முதற்பகுப்பினரைச் சார்ந்தார் குடிப்பது கூழானாலும், இல்லை யென்று வருந்திக் கேட்டாருக்கு தமக்குடையவைகளைப் பகுந்து ஓர்பாகத்தை யவர்களுக்குக் கொடுத்து மற்றயதைத் தாங்களருந்து வார்கள்.

மூன்றாம் பகுப்பாளரைப் பற்றியோ நாம் இத்தன்மை வாய்ந்தவர்களென்று கூறவேண்டு வதில்லை. ஈகையென்பது இன்னதென்றே அறி

யாது, யாருக்கு நன்மை செய்தால் தமக்குத்திரும்ப நன்மை பயக்குமோ என்று எண்ணங்கொண்ட அவர்கள் கொடையைப் பற்றி என்னென்று சொல்லுவது! இவர்கள் இரண்டாம் பகுப்பாளரினும் இழிந்தவரே யாவர். சிலர், பிறருக்குப் பயன்படத் தக்கவைகள் தம்மிடத்திலில்லையென்றும், தாம் செல்வச்சிறப்பு எய்துங்கால், ஈகையைக் கைக்கொள்வோமென்றும் மௌடிகளாய் விடுகின்றனர். மிகச் செல்வம் படைத்துச் செருக்குற்றவரோவெனில்,தாம் ஏகாந்தமாய் இருமாப்புற்று வழி நடக்குங்கால், ஓர் எளிய குருடனோ, கூனனோ, முடவனோ கல் நெஞ்சுங் கரையக்கூவி தன்னைப் பரிபாலிக்கும்படி வேண்டும்போது கண்டுங் காணாததுபோற் போகின்றன ராகையால், அவர்கள் இக்காயம் நிலையற்றதென்று நினைக்காதவர்களாகி இச்சென்ம மெடுத்ததின் பயனையும் நோக்காதவர்களாய் அழியாத இழிசொல்லுக்கும் இலக்காகிறார்கள். இத்தகைமையர்,

"பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியே கம்பனே."

என்ற பட்டினத் தடிகள் பாடலையும்,

"நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று" என்னும் குறளையும் அறிந்திலர் (போலும்.

அறிவு:—இப்பரந்த வுலகத்திலே, மனிதனுக்குத் தெரியாமல் மாயமாகத் தோன்றும் பொருட்கள் அளவற்றதாயினும், அவன் தனது பஞ்சேந்திரியங்களை கவனத்தோடு உபயோகிப்பானாயின், கணந்தோறும் மறை பொருட்களைச் சிறிது சிறிதாய் மயக்கமறச் சித்திபூர்வமாய் அறியும் அறிவைப் பெறுகிறான். முதன் முதல் அறிவையூட்டுவது புத்தக நூலல்ல, தன்னைச் சுற்றிலும் பரந்து கிடக்கும் பல்லாயிரம் ஜீவஜெந்துக்களாகிய பெரிய நூலாகும். இயற்கைப் பொருட்களைத் தீரவிசாரித்து அறிவை அதிகப் படுத்தியன்றோ உலகத் துதித்த கவிஞரனைவரும் காவியஞ் செய்தனர். ஆனால், நூற்கள் அறிவுபுகட்ட வல்லனவல்லவோவென்றால், உலக இயற்கையிலே சிறிதும் பயிலாத சிற்றறிவுள்ளாருக்கு அவைகள் உபயோகப்படா. உலக வியவகாரங்களிற் சிறிதாவது பழகியவனே நூற்களை வாசித்தும் வாசிக்கக் கேட்டும் தனக்குண்டான அறிவைவிசாலப் படுத்திக் கொள்ளலாம். ஆகையால்,பிரபஞ்சவாழ்க்கையில் கண் மூடித்தனமாயிருப்பவன் அறிவு குன்றுவதனால், அறிவினால் தன்னைச் சாரும்படியான கல்வி, நீதியுணர்ச்சி முதலியவைகளை யடையமாட்டாதவனாய்த் தவிக்க நேரிடுகின்றது; ஆகவே, அறிவு என்பது பிரகிர்தி ஞானம் என்றும், அதை நல்ல நிலையினிறுத்திக் கொள்வதும், அந்நிலைக்குக் கீழாக்கிக் கொள்வதும்,முன்னிருந்த நிலையிலு மேலாக்கிக் கொள்வதும் தலைமையாக்கிக் கொள்வதும் தன்னாலேயே என்றும் ஏற்படுகின்றது. குணியமுத்தூர். கே. ஆர். கணபதிபிள்ளை.

ஓர் விண்ணப்பம்

(த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதியது.)

இக்காலத்திலே உத்தர தேசங்களிலிருந்து வரும் சிலர், உண்மையான வேதாந்தம் இஃதென்றறியாது, சங்கராசாரியர் தமது ஆன்ம ஈடேற்றத்துக்காகச் சிவபெருமானைத் தோத்திரஞ்செய்த சிவானந்த லகரி சௌந்தரி யலகரி சிவபுசங்கம் என்னும் நூல்களுக்கும் செய்து வந்த சிவபூசைக்கும் மாறாகத் தாம் பௌத்தர்களை வென்று அவர்களை ஓட்டுதற் பொருட்டுச் செய்த வேதாந்த நூற்பாஷ்யத்தை மெய்யுரையென்றெண்ணி, அதனைமாத்திரங் கற்றுவிட்டுத் தங்களுக்கு எல்லாந் தெரியு மென்றும், சங்கராசாரியர் பிறத்தற்குப் பதினாயிரம் வருஷங்களுக்கு முன்றொட்டுத் தமிழ்நாட்டிலே வழங்கி வருகின்ற ஆகமவழியொழுகுஞ் சித்தாந்திகள் கிணற்றுத் தவளைகளுக்குச் சரியானவர்களென்றும், அவர்கள் ஒன்றுந் தெரியாதவர்களென்றும் போதிக்கின்றார்கள்.

சங்கராசாரியர் செய்த நூல்களும் அவற்றிற்கு அனுகூலமாக இயற்றப்பட்ட அநேக நூல்களும் அச்சில் வந்துவிட்டன. சம்ஸ்கிருதமறியாத மற்றெல்லாப் பாஷைக்காரர் பொருட்டு இவற்றுட் பல இங்கிலீசு தமிழ் என்னும் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சில் வந்திருக்கின்றன. சித்தாந்தத்தைப் பற்றிய நூல்களுள் நூற்றிலொரு பங்குதானும் இன்னும் அச்சில் வரவில்லை. மொழிபெயர்க்கப்பட்டவை பதினாயிரத்திலொன்றுமில்லை. ஆகமங்களுள் ஒன்றேனும் தமிழிலாவது மொழிபெயர்க்கப் படவில்லை. இப்படியாக இவர்கள் சித்தாந்தத்தை அறிந்தவர்களென்பது எங்ஙனம்!

தஞ்சாவூர்ச் சில்லாவிலுள்ள கஞ்சனூரிலே ஐந்நூறு வருஷங்களுக்கு முன் அவதரித்து, நெருப்பிலே பழுக்கக் காய்ச்சிய இருப்புப் படியிலேறி யிருந்து இருபத்தொரு ஏதுக்களாற் சிவனே பரம்பொருளென்று நாட்டினவர் அரதத்தாசாரியர் என்பவர். இவர் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் என ஒரு நூல் செய்திருக்கின்றார். இதிற் சிவபரத்துவஞ் சாதிக்கப்பட்டிருக்கின்றது. இவருக்கு நான்கு வேதங்களும் எல்லா உபநிஷத்துக்களும் பதினெண் புராணங்களும் பதினெண்ஸ்மிருதிகளும் மூன்று இதிகாசங்களும் பல தலமான்மியங்களும் சைவ நூல்களும் பூரணமாகத் தெரியும். இதனை அந்நூலில் அவரெடுத்துக் காட்டிய பிரமாணங்களால் இனிதுணரலாம். இவர்போல இவைகளெல்லாமறிந்தவர் தற்காலத்திலொருவரு மில்லை. இந்த அரதத்தாசாரியர் சித்தாந்தியே.

சித்தாந்திகளைக் கிணற்றுத் தவளைகளென்று சொல்லுமிவர்கள், பிரமத்தைவிட ஆன்மா என ஒரு பொருள் வேறில்லை என்கிறார்கள். வைதிகர்களாய் ஈசுரனொருவனில்லை யென்று சொல்பவர்களாகிய

கபில முனிவரையுள்ளிட்ட சாங்கியர் தாமும் ஆன்மாக்கள் உண்டென்கிறார்கள்; இன்னும், வைதிகர்களாய் ஈசுரனில்லையென்று சொல்லும் சைமினி முனிவரையுள்ளிட்ட மீமாஞ்சகர்தாமும் ஆன்மாக்கள் உண்டென்கிறார்கள். நையாயிகர் வைசேடியர்களும் அநேகமாய் நித்தியமாய் ஈசுரனிலும் வேறாய் உண்டென்கிறார்கள். யோகர்களும் உண்டென்கிறார்கள். பௌத்தர்களும் உண்டென்கிறார்கள். கிறிஸ்தவர்களும் உண்டென்கிறார்கள். இவையனைத்தும் அறியாத இவர்களா சித்தாந்திகளா கிணற்றுத் தவளைகள்!

ஒரு பெரிய வேந்தாந்தியுடைய வாக்கைக் கேளுங்கள்:—

இந்தப் பெரியவர் வாக்குச் சீவன் ஈசுரன் முதலிய ஆறுபொருள்களும் அநாதி என்கின்றது.

இவர்களுக்கு விபூதி ருத்திராக்ஷ தாரணமில்லை, சந்தியாவந்தனமில்லை, ஆலய வழிபாடில்லை. ஆயினுந் தங்களைச் சுவாமிகளென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். சங்கராசாரியருக்கோ இவைகளெல்லாமுண்டு. ஆன்மார்த்தமாகிய சிவலிங்க பூசையுமுண்டு. பிற்காலத்திலுள்ள சங்கராசாரியர்கள் கோயில்கள் சிலவற்றிற் சென்று பரார்த்த லிங்கத்திற் பூசையுஞ் செய்திருக்கின்றனர். சிதம்பரம் முதலிய அநேககோயில்களிலே இவர்களைப் பூசைசெய்ய விடவில்லை; விட்டிருந்தால் எல்லாக் கோயில்களையுந் தாங்களே ஏற்றுப்பூசை முதலியன செய்வார்கள்.

சைவாநுட்டான மாத்திரமன்று வைதிகாநுட்டானந் தானுமில்லாத இந்தச் சுவாமிகள், சங்கராசாரிய சுவாமியினும் பார்க்கப் பெரியவர்களாய் விட்டார்களா? சங்கராசாரிய சுவாமியையே பரமஹம்ஸ பரிவிராசகாசாரியர் என்பர். இந்தப் பரமஹம்ச பரிவிராசகம் என்னும் இதுவே ஆகமேலான சந்நியாச மென்றும் இந்தச் சந்நியாசிகள் உலகத்தில் மிக அரியர் என்றும் பரமஹம்ஸ பரிவிராசகோப நிடதம் சொல்லுகின்றது.

மும்மூர்த்திகளு ளொருவராயும், கிராதவேடங்கொண்ட சிவபெருமானை வில்லாலடித்த அருச்சுனனுக்கு இக்காலத்தார் பலர் உச்சிமேற்கொள்ளும் கீதையை உபதேசித்தவராயு முள்ள கிருஷ்ண பகவானே சிவலிங்கபூசை செய்த சரித்திரங்களும் அவ்விஷ்ணு வியாசராய் வந்து அவ்வருச்சுனனைத் தீர்த்த யாத்திரை முதலியன செய்யென்று ஏவிய சரித்திரங்களும், அக்கீதை சொல்லப்படுகின்ற மகாபாரதத்திலேயே சொல்லப்படுகின்றன. இந்தச் சுவாமிகள் அந்தக் கிருஷ்ணபகவான் அருச்சுனன் வியாசமுனிவரென்னும் இவர்களிலும் பார்க்கப் பெரியவர்களாய் விட்டார்களா!

இந்தச் சுவாமிகளுக்கும், சைவாலயங்களுக்கும் சிவதீக்ஷைக்கும் பஞ்சாக்ஷர செபத்துக்கும் தேவார திருவாசகங்களுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரணம் முதலிய கிரியைகளுக்கும் ஆகா !! எவ்வளவு தூரம் !!!

நான் பிரமம் என்று சொல்லுமிவர்கள் என்ன சமயத்தவர்கள்? சைவர்களா? இல்லையே. ஆகவே இவர்களைச் சைவர்கள் தலைமேற்றூக்கி வைப்பதென்னை? சைவாலயங்களெல்லாம் பசு பதி பாசமென்னும் முப்பொருள்களை உணர்த்துவன வல்லவா? ஆலயவழிபாடு செய்வோர் இவர்களைத் தூக்கித் தலைமேல் வைக்கலாமா? சிவதீக்ஷையம் பஞ்சாக்ஷரசெபமும் எங்கே சொல்லப்பட்டன? பகவற் கீதையிலா? சிவதீக்ஷை பெற்றுப் பஞ்சாக்ஷர செபஞ்செய்வோர் இவர்களைத் தூக்கித் தலைமேல் வைக்கலாமா? தேவார திருவாசகங்களிலே எங்கேயாவது நான் பிரமம் என்று சொல்லப்பட்டிருக்கின்றதா? இத் தேவார திருவாசகங்களை நியமமாகப் பாராயணம் பண்ணியும் கூட்டங்கள் சபைகள் தொடங்கும் போதும் முடிக்கும் போதும் ஓதியும் வருபவர்கள் இவர்களைத் தூக்கித் தலைமேல் வைக்கலாமா? சிவஞானசித்தியார் முதலிய ஞானசாத்திரங்களைப் பள்ளிக்கூடங்களிலே பிள்ளைகளுக்குச சமயபாடமாகப் படிப்பிக்கவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் இந்தச் சுவாமிகளைத் தூக்கித் தலைமேல் வைக்கலாமா? சிவஞான சித்தியாரிலே "நான் பிரமமென்னு ஞானம் கருது பசுஞானம்" (சித்தி; கூ-உ.) என்று இந்த ஞானம் கண்டிக்கப்பட்டிருக்கின்றதே. அந்தியேட்டியெங்கே சொல்லப்பட்டது! சைவாகமத்திலன்றோ? தங்கள் பிதா மாதா முதலானோருக்கு அந்தியேட்டி செய்வோர் இந்தசுவாமிகளைத் தூக்கித் தலைமேல் வைக்கலாமா? தாயுமான சுவாமி யார்? இவர், சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய சைவசித்தாந்த நூல்களை இயற்றிய மெய்கண்டதேவர் அருணந்தி சிவாசாரியர் முதலான சந்தானசாரியர்களைத் தோத்திரம் பண்ணியிருக்கின்றாரே. இத்தாயுமான சுவாமியுடைய பாடல்களை மெய்யன்போடு பாராட்டிப் படிப்போர் இந்தச சுவாமிகளைத் தூக்கித் தலைமேல் வைக்கலாமா! ஒருபோது இந்தச் சுவாமிகள் மேனிலைக்குப் போய்விட்டார்கள் மேனிலைக்குப்போன இவர்களுக்கு இக்கிரியையொன்றும் வேண்டியதில்லை யென்பாரேல், சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய நூல்களில் ஞானிகளுக்கும ஆலய வழிபாடு விதித்திருத்தலையும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்மாணிக்கவாசக சுவாமிகள் முதலானோர் ஆலயங்களிற்சென்று வழிபாடு செய்திருத்தலையும் நம்பினவர்களாகிய தாங்கள், மேனிலைக்குப் போனவர்களுக்கு இவை யில்லையென்று எப்படிச சொல்லலாம். "படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோயிலா?"

சைவ அன்பர்களே! நீங்கள் கோயில்களிலே போய்ச் சொல்வது "மீளாவடிமை யுமக்கேயாளாய்" என்பது முதலிய தேவாரம்,வீட்டிலே சொல்வது நான் பிரமமென்பது. நன்றாயிருக்கின்றது. நீலகண்ட சிவாசாரியர், கச்சியப்ப சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர்,அருணந்திசிவாசாரியர், திரிலோசன சிவாசாரியர், அகோரசிவாசாரியர், சோம சம்பு சிவாசாரியர், அரதத்தாசாரியர், பட்டநாராயணகண்டர், சர்வாத்மசம்பு சிவாசாரியர், மறைஞானதேசிகர், சிவாக்கிரயோகிகள், ஞானப்பிரகாச சுவாமிகள் முதலான அநேகர் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் அநேக நூல்கள் செய்திருக்கின்றனர். இவைகளைப் படியுங்கள். இவற்றின்படி நடவுங்கள். இவர்களுட் பலர் பிராமணர். இவர்களுக்கு வேதங்களும் வேதசிரசாகிய உபநிடதங்களும் புராணங்களும் வேதாந்தம் மீமாஞ்சை சாங்கியம் புராணம் என்னுமிவைகளும் ஆமூலாந்தமாக வரும்.

கடையெழுவள்ளல் வரலாறு

"வள்ளல்" என்ற சொல்லுக்கு வரையாது கொடுப்பவர் என்பது பொருள். வரையாதென்பது ஓர் அளவின்றிக் கொடுத்தலாம். இங்ஙனம், ஈவதைப் பலதிறப்படுத்திக் கூறுவர். அது:—மகனுக்கு அரசு கொடுத்தலாகிய உரிமையிற் கொடுத்தலும், மருமகனுக்கு மகளைக் கொடுத்தலாகிய வழக்கத்திற்கொடுத்தலும், அரசனுக்குத் திறை கொடுத்தலாகிய அச்சத்திற்கொடுத்தலும், வாய்க்கரிசி யிடுதலாகிய அவலத்திற் கொடுத்தலும், சேரன் சோழனுக்கு விருந்து செய்தலாகிய ஒப்போர்க்குக்கொடுத்தலும், பெருமுடி வேந்தர்க்கு குறுநில மன்னர் குதிரை கொடுத்தலாகிய உயர்ந்தோர்க்குக் கொடுத்தலும், வறியார்க்குப் பொன்கொடுத்தலாகிய இரக்கத்திற் கொடுத்தல் முதலியவாம். இங்ஙனம் வழங்குந் தன்மை பலவகையாக நிற்பினும், இறுதியிற்கூறிய இரக்கத்திற் கொடுத்தல் நீங்கிய ஏனையவெல்லாம் ஓர்வித பரிவர்த்தனையே யன்றி ஈதலாகா. இதனைமுப்பாலருளிய நமது திருவள்ளுவ தேவரும், தமது குறளில்,

> "வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
> குறியெதிர்ப்பை நீர துடைத்து."

என்றருளினர். இம்மை மறுமைப் பயன்களை யளிக்கவல்ல சீரிய ஈகைக் குணமானது மானிடர் ஒவ்வொருவரிடத்தும் அமைந்திருக்க வேண்டுவது அவசியம். இங்ஙனம் அமைவதால் அவர்கட்குப் புகழும் புண்ணியமும் உண்டாம். அது:—

> "ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
> தூதிய மில்லை யுயிர்க்கு"

> "உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
> றீவார்மே னிற்கும் புகழ்"

> "நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
> போற்றாது புத்தே ளுலகு"

> "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
> வலவ னேவா வான வூர்தி
> யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்தென"
> (புறம். 27.)

எனவருவன வற்றால் புகழும்,

> "மெல்லிய லரிவைநின் னல்லகம் புலம்ப
> னிற்றுறந் தமைகுவெ னாயினெற் றுறந்
> திரவலர் வாரா வைகல்
> பலவா குகயான் செலவுறு தகவே" (குறு-137.)

உரை:—மெல்லிய இயல்புள்ள அரிவையே! நினது நல்ல நெஞ்சம் வருந்தாதி; நின்னைத் துறந்து மனம்பொருந்தி யிருப்பே னாயின், என்னைக்(கொடாதவன்) கைவிட்டு இரவலர்(என்பால்) வாராதநாட்கள் பலவாய் விடுக, யான் (மறுமையிற் செல்லுதற் குரிய) நல்லுலகும் இல்லாதாகுக.

ஈத்துவக்கும் இன்பமுணர்ந்து உயிர்க்கு ஊதியமாகிய ஈதலை என்னும் விழைந்தோனாதலின், ஈயாதார்க்கு நல்லுலகத்து இடமில்லை யாதல் துணிபு,

எனவரும் குறுந்தொகைச் செய்யுளாலும்,

"கொடையே யெவர்க்கும் எப்பேறும் கொடுக்கும்" என வரும் காஞ்சிப்புராணச் செய்யுளாலும், புண்ணியமும் உண்டா மென்பது இதனால் உணர்த்தப் பட்டது.

இத்தகைய புகழைத் தருவதும், புருஷார்த்தங்கள் நான் கினும் பின் மூன்றையும் தர வல்லதாகிய முன்னிற்கும் முதன் மையுடைய அறமாவது இந்தக்கொடையே யாகும். இங்ஙனம் சிறப்புற்ற கொடை, அல்லது ஈகை யென்பது பெறுவோரால் எவ்விதப் பயனுங் கருதாது, இத்தனை முறைதான், இன்னவே னோதான் கொடுப்பதென் றெண்ணாது! இரப்போர் முந்திப்பெற் றுப் பிந்தியும் வந்து கேட்பினும் இல்லை யென்னாது கொடுத் தலும், இரப்பார் குறிப்பறிந்து எதையுங் கொடுதது அவர்மகி ழத்தாம் மகிழும் இயல்பும், ஒருங்கே அமையப்பெற்றவரே வள்ளல் என்னும் பெயர்க்குரியார். இத்தகைய கொடை மட முடையாரை மூப்பு, பிணி, சாக்காடு என்பாதிய துன்பங்கள் சிறிதும் அணுகாதென்பர் அறிஞர்.

பெறுதற்கரிய செல்வம் பல படைத்திருப்பினும், ஈகைக் குணம் எய்தப் பெற்றாலன்றி சிறிதும், புகழ்பெறற் குரியரா கார். துரியோதன னிடத்துப் பெற்றதோர் சிற்றரசு கொண்ட கன்னன் கொடை யாலன்றோ பேரிசைபெற்று இன்னும் புக ழ்ச்சிக்கோர் எல்லையாக விளங்குகின்றான்.

குறுநில மன்னர்களான வள்ளல்கள் பெற்ற பெரும்புகழி ற்கு எப்பேரரசர் பேரும் முன்னிற்க வல்லதோ?

இங்ஙனம் ஈந்து புகழ்பெறும் பெரும்பாக்கியம் எல்லா ருக்குங் கிட்டுவதரிது. தவமுடையார்க்கே அது சித்திப்பதா கும். "தாதா கோடிக் கோருவன்" என்றார் நமது ஔவை யாரும். (தொடரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார், கோயமுத்தூர்.

காளமேகப் புலவர்

இவருடைய இயற்பெயர் வரதர் என்பது. இவரூர் சோழ மண்டலத்துள்ள கும்பகோணம். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முன்னர் என்பர். திருவானைக்காவில் அகிலாண்டவல்லி திருவருளாற் கவிபாடும் வரம் பெற்றவர். ஆசு கவி பாடுதலில் அதி சாமர்த்தியமுடையவர். "ஆசுகவி மாரி யகில வுலகமெல்லாம்-வீசுகவி காளமேகமே" எனவும் பாடப் பட்டவர். எழுத்துக் கொடுத்தாலென்ன! சொல்லுக் கொடுத்தாலென்ன! கருத்துக் கொடுத்தாலென்ன! கொடுத்த சமுத்திகளை யெல்லாம் குறைவற அமைத்துத் துடுமெனப் பாடிமுடிப்பர். பலதனி நிலைக்கவிகளும், திருவானைக்காவுலா, சித்திரமடல், பரப்பிரம விளக்கம் என்னும் பிரபந்தங்களுஞ் செய்தவர். சிவஸ்தல யாத்திரையிற் சென்று சிவதரிசனஞ் செய்து கவிகளும் பாடினவர். பழிக்கவிபோலத் தோன்றுந் துதிக்கவிகளும் பாடினவர். சிலவிடங்களில் வசைக்கவிகளும் பாடினவர். "வசை பாடக்காளமேகம்" என்ற பாட்டுமுண்டு.

திருவாலங் குடியிற் சென்றபோது ஆலங்குடியான் என்னுஞ் சுவாமி திருநாமம் ஆலமுண்ணான் எனவும் பொருள்படல் நோக்கி விரோதாபாசவணி தோன்ற "ஆலங்குடியானை யாலாலமுண்டானை யாலங்குடியா னென்றார் சொன்னார்" என்றும்பாடினவர். அண்ணாமலையிற் சுவாமி முன்னிலையிலே கிடந்த இடபவாகனத்தை நோக்கி "நடக்கவறியாது" என்றும் பாடினவர். வேதம் போம் வாயான் விகடராமன் என்பவனுடைய குதிரை இளப்படைந்து தள்ளாடித் தள்ளாடி மெள்ள மெள்ள நடத்தலை நோக்கி "மாதம் போங்காதவழி" என்று நகையாடினவர் தேவடியாள் ஒருத்தி பாடுவேன் என்று சொல்லிக் கழுதைபோலக் கத்துதலை நோக்கிக் காணமற்போன தன் கழுதை என்று வண்ணான் எண்ணினான் என்பது புலப்படக் "கழுதைகெட்ட வண்ணான் கண்டேன் கண்டேனென்று - பழுதை யெடுத்தோடி வந்தான் பார்த்து" என்றும் நகை யாடினவர்.

திருமலை ராயன் பட்டணத்துக்குஞ் சென்றவர். அவனுடைய அவைக்களப் புலவரை யெல்லாங் கவிபாடி வென்றவர். நீவிர் யாவர்? என்றபோது "தூதைந்து நாழிகை" என்று கவி ஒன்று தொடங்கிக் கவிபாடும் வீரமெல்லாங் கட்டுரைத்துக் "கவி காளமேகம் யானே" எனப் பெயருங் காட்டித் தருக்கொடு முடித்து நின்றவர். சிலேடை முதலிய சமுத்திகளை யெல்லாஞ் சொல்லச் சொல்லத் தாமத மின்றிப்பாடி முடித்தவர். புலவர்க்குத் தலைவர் எனவும், குரங்குக்குத் தலைவர் எனவும் இருபொ

ருள்பட நின்ற கவிராசர் என்பது தக்கதோர் பட்டம் என்று தரித்து நின்ற புலவர் சிலவரை நோக்கிப் புலவிர்காள்! நீவிர் குரங்குகளே என்பது புலப்பட "வாலெங்கே நீண்ட வயிறெங்கே" என்று கவிபாடி நகை யாடினவர். திருமலைராயனும் புலவருந் தமக்குச் செய்த அவமானம் நோக்கி மனம் புழுங்கி அவ்வூரைக் "கோளரிருக்கு மூர்கோள் கரவு கற்றவூர்" என்றுபாடி "விண்மாரி யற்று வெளுத்து மிகக் கறுத்து—மண்மாரி பெய்க விந்தவான்" என்று முடித்தவர். திருவானைக்காவுலாவிலே மடக்கணி முதலிய அணியெல்லாஞ் சிறக்கப்பாடினவர், பரப்பிரம விளக்கத்திலே நாராயண பரத்துவத்தை மறுத்துச் சிவபரத்துவத்தை எடுத்துக் காட்டி நிறுத்தினவர்.

பங்கயக் கண்மாலைப் பரத்துவனென்றே வியாசன்
கங்கைக் கரையுரைத் தகைந்நாவன்-றங்கவற்குத்
தம்பிக்க மால்வந்து சங்கரனே யெவ்வுயிர்க்கும்
எம்பிரா னென்றுரை ளிசைந்து.

தமிழ்ப் புலவர் சரித்திரம்.

நீதிமொழி

கண்ணுதற் பெருமான் கழலிணை பரவி
யெண்ணுதற் கெண்ணு திருப்பது தீது. 1

திருவருள் வடிவாத் திகழ்ந் தெழுந்தருளுங்
குருவடி வழுத்தாக் கொள்கைவெந் தீது. 2

பிரணவப் பெரியோன் பெரியதிற் சிறியோன்
பரனடி யவரைப் பழிப்பது தீது. 3

தொல்லார் கல்வியுந் தகமுறு செல்வமு
மில்லார் தம்மை இகழ்வது தீது. 4

நட்பிகழ் பவரை நயவுதல் தீது
உட்பகை யவரை உறவுதல் தீது. 5

கண்மயிர் பரித்தல் கவினகம் உரோமம்
திண்மையாய்க் கடித்தல் செப்பருந் தீது. 6

உடைந்த பாத்திரத்தி லுண்பது மாங்கே
குடங்கையாற் சோறுட் கொள்வதுந் தீது. 7

காலொடு காலைக் கலந்துறத் தேய்த்து
மேல்புனல் விடுத்து விளக்குதல் தீது. 8

உண்டிடுங் கலத்தால் உதகநீர் முகந்து
அண்டிடுங் கரங்கா லலம்புதல் தீது. 9

ச. மாடசாமிபண்டாரம், தென்காசி.

தருமம்

அறிவிற் சிறந்த ஐயன்மீர்! அருமை பெருமை பொருந்திய இத் தரும மென்னும் விஷயத்தை வியாசமாய் இதன்முன்னர் எத்தனையோ வித்வ சிகாமணிகள், இனி எவருமவ்வாறு வரையத்தகாத வண்ணம் எழுதியிருப்பினும், அவர்கள் முன் என்சிற்றறிவிற் கெட்டியவாறு எழுதிய இதிற்குற்ற மிகுதியுங் காணப்படலாமாயினு மிதைவாசிக்கும் அறிவு முதிர்ந்தவர்களெல்லாம், அன்னம் நீர்பிரித்துண்ணும் பால்போலக் குற்றங்களைந்து குணங்களைக் கொண்டு அவற்றோடென்னையுஞ் சீர்திருத்தி ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

அறிவிற்சிறந்த அன்பர்காள். தருமம்செய்தல் என்னும் இச்சிறந்த குணமானது ஊர்வன, பறப்பன விலங்கு, முதலிய பிராணிகளிடத்து அமைவதற் கில்லாது,

"அரிது அரிது மானிடராதலரிது"

என்றபடி பெறுதற்கரிய மானிடப் பிறப்பு வாய்ந்தவர்களிடத்து மட்டிலும் இரக்கம்பற்றி நிகழ்வதான ஓருள்ள நெகிழ்ச்சியாம்.

"வறியார்க் கொன்றீவதே யீகை"

என்றபடி பொருள்தேடி யுண்ணுவதற்குச் சக்தியில்லாத குருடர், முடவர், அநாதரவுற்றவர், அநாதைச்சேய், விருத்தாப்பியர் வியாதியாளர், முதலியோர்களுக்காக அன்னவஸ்திரங்கொடுத்தல், சத்திரங்கட்டல், குளங்கிணறு வெட்டல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், கல்விச்சாலையில் சம்பளம் வாங்காது கற்றுக் கொடுத்தல் முதலியனவே தருமத்திற்குரியனவாம். ஆனால் பிறர் மதிக்கவேண்டுமென்ற எண்ண மில்லாமல்,

"ஆனமுதலி லதிகஞ் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாயேழ் பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு." என்றதனாலும்,

'வருவாயுட்கால் வழங்கி வாழ்க' என்றபடியாலும், வரவுக்கு மிஞ்சாமல் நம்மாலியன்ற வரையில் தருமஞ்செய்யக் கடப்பட்டுள்ளோம். இவ்வித தரும நிபந்தனையைக் கவனியாத சிலர், யாசகர்களிடத்து மிகக் கொடிய சிந்தையுடையவர்களாகி அவர்களை அடித்துத் துரத்துவதும், தடியா கூலிவேலைக்குப் போயாவது, சம்பாத்தியம் பண்ணலாகாதா என்று பலவகையா யேசுவதுமான துரப்பியாச முடையவர்களாய் ஒரு காசுகூடக் கொடுக்கின்றார்களில்லை. தருமஞ் செய்ய வேண்டிய கடமை மேற் சொன்னவாறிருக்க இவர்கள், தகுதிநோக்கியும், சயநயம் பாராட்டியும், திவான்பகதூர், ராய்பகதூர், மெம்பர், முதலிய பல தற்கால கீர்த்தி யடையவேண்டி, ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு செலவு செய்கின்றார்கள். தவிரவும்,

கவர்னர், கவர்னர் ஜெனரல் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களைப் பேட்டி காணவேண்டி யதற்கும், அவர்களைத் தங்கள் வீட்டிற்கு வரவழைப்பதற்குமான ஏற்பாடுகள் செய்து அதற்காகவும் அளவிறந்தரூபாயைச் செலவிடுகிறார்கள். இவ்விதம் சுய நலங்கருதிச் செய்கிற இவர்களின் பெருமை ஐந்துநிமிஷங்கூட நிற்காது நீர்மேலெழுத்துப்போலாகிவிடு மென்பதிலைய மின்றாம். அந்தோ, இவர்களி னறியாமையையும் பிரையாசைப் பட்டுச் சம்பாதித்த பணத்தை அனாவசியமாய்ச் செலவு செய்யு மூடத்தனத்தையும். என்னென் றுரைப்பது.

"அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூஉங் கில்லை கேடு."

என்பதினைக் கனவினுங்கூட உணர்கின்றார்களில்லை, தருமம் என்பது இம்மையிற் புகழைத் தருவதுடன், மறுமையிலென்றும் பொன்றாத சுவர்க்கத்திற்கு ஆளாக்கு மென்பதையும் எத்தனையோ தரும சாத்திரங்கள் முறையிட்டாலும், அவைகளைச் சத்தியமென் றெண்ணாது வெறுங்கட்டுக் கதையாகவே நினைத்திருக்கின்றனர்களே யன்றி, தருமம் தலைகாக்கும், என்பதைச் சிந்திக்கின்றார்க ளில்லை.

"இலனென்னு மெவ்வமுரை யாமையீதல்
குலனுடையான் கண்ணே யுள,"

இரந்தோர்க் கீவது முடையோர்கடனே என்றபடி நம்மாலியன்ற வளவு யாசகர்களைக்கேலிபண்ணாமலும், இல்லையென்று சொல்லாமலும்,

"இல்லோரிரப்பது மியல்பே யியல்பே"

என்பதை யுன்னி முகமலர்ச்சியா யீந்து இகபரசாதனமாகிய இதைக் கொள்ளவேண்டியது பகுத்தறிவுள்ள மானிட தருமத்திற் கேற்றது. இதனை நமக்கு, 'குமணன்' 'கர்னன்' போன்ற எத்தனையோ வள்ளல்களின் சரித்திரம், தெள்ளிதா யுணர்த்துவதை யறியாதவர்களில்லை யென்றையமறச்சொல்லலாம். இவ்வண்ணமிவர்களிருந்த காலந்தொட் டிதுவரை எத்தனையோ யுகங்களாகியு மவர்களிப்பொழுது முயிரோடிருப்பதற்குச் சமானமான அவர்களுடைய புகழை யிதுவரை யழியாது நிலை நிற்கச் செய்தது, அவர்களது தளர்விலாத் தருமக்கொடை யன்றோ.

இவ்வித சரித்திரங்களை யுணர்ந்தும், 'பேதைமை யென்பதொன்றி யாதெனினே தங்கொண், டூதியம்போக விடல்' என்றபடி, ஆக்கமாகிய, செல்வம், புகழ், அறங்கள், முதலியவைகளைப் புறம்பேவிட்டு, எவ்வழியாயினும், பொருள் சம்பாதித்தல் வேண்டும், அதனைப் பூதங்காத்தல் போல் காக்கவேண்டும், ஈவதை மருந்துபோல் கொள்ளல் வேண்டும், ஈவாரையு மீயவொட்டாது தடுத்தல் வேண்டும், என்பதைத்தான் றருமமென நினைத்து அநேகர் தங்கள் வாணாளை வீணாளாக்கித் தங்கள் வயிற்றுக்குக் கூட வுண்ணாமலும்,

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரேயநுபவிப் பார்
பாவிகா ளந்தப் பணம்." என்றபடி,

இலவுகாத்த கிளிபோலாகி,

"ஈதலிசைபட வாழ்தலது வல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு."

என்பதையுங் கைவிட்டுப் புகழென்பதைச் சற்றுங் கொள்ளாது, பாமரஜனங்களாலும், பரம உலுத்தன், ஈயாச்சண்டாளன், என்று நிந்திக்கும் வசைச்சொற்களைக் கேட்டுத் தனக்கும், பிறர்க்கும், பிரயோஜன மில்லாது,

"இருமலும் சோகையும் ஈளையும்வெப்பும்
தருமஞ் செய்யாதவர் தம்பாலதாகும்
உருமிடி நாணமுரோ ணிகழலை
தருமஞ் செய்வார் பக்கற்று முகிலாவே"

என்றபாட்டிற்கிலக்காய், என்று மீளாவியாதிக்குள்ளாகி இச்சனியன் எப்போது தொலையப்போகிற தென்று பிறரிகழும்படி யிருந்திறந்து கடைசியாய் நரகத்திற்சென்றுசதா துன்பத்தையடைய ஆளாய் விடுகின்றார்கள். ஆதலால்,

"நாளைச் செய்குவமற மெனிவின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினுநீங்கும்
இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீருலகின் முழுவது மில்லையே"

என்றபடி நாளைச் செய்வோமென்று அருமையான காலத்தைக் கழித்துப் பணத்தையும் வீணில் விரயஞ் செய்யாது,

முழுமனத் திருப்தியோடு அதற்கேற்ற காலத்திலேயே தகுதிக்குத் தக்க தருமஞ்செய்து அதனால் கிடைக்கும் புகழுக்கும், ஈசுரன் அருளுக்கும் பாத்திரப்படுவோமாக. சுபம்.

ச. மா. பொன்னையா,
தென்காசி.

சோதிட கலாநிதி

சிக்ஷாத்தியாயம் (1) வது சிருஷ்டிப்பிரகரணம்

மங்கலம்

மலர்தலை யுலகிலமிழ் தினுமினிய மதுரிதச் செந்தமிழ்ம் மொழியி, லிலகுசோ திடநற்கலா நிதியதனை யியாவருமுணர்ந் திடச் சாற்றற், குலப்பிலா வன்பருளமெனுங் கோவிலுற் றவ ரவர் விழைவுற்ற, நலமருள்செய் நால்வா யுடையானை நன்முக னடி மலர்ப்பணிவாம்.

நூன்முகம்

மங்கலம் நிறைந்த இறைவன் விதித்தன இவை எனவும் விலக்கின இவை எனவும் வேதங்கொண்டு ஜீவர்கண்மாட்டுள்ள கருணை மிகுதியினாலே உயிர்க்கு அறிவுறுத்துகின்றனர்.

ஶிக்ஷா கல்போவ்யாகரணம், நிருத்தம்ஜ்யோதிஷாங்கதிః
சந்த ஸாம்லக்ஷணஞ்சைவ, ஷடங்கோவேத உச்யதே

என்ற சுலோகப்படி சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என அவ்வேதம் பெற்றுள அறுவகை அங்கங்களுள்

ஜ்யோதிஷாமயநம்சக்ஷுர், நிருக்தம்ஶ்ரோத்ரமுச்யதே
சந்தః பாதௌது வேதஸ்ய, ஹஸ்தௌகல்பః ப்ரசக்ஷதே.
யதாசிகா மயூராணாம், நாகாணாம் மணயோ யதா
தத்வத்வேதாங்கசாஸ்த்ராணாம், ஜ்யௌதிஷம்மூர்த்தநிஸ்திதம்

என்ற சுலோகப்படி இச்சோதிட சாஸ்திரம் வேதசரீரத்திற்கு கண்ணாக விளங்குகின்றன. ஆகவே அங்கசாஸ்திரங்களில் இச்சாஸ்திரமே முதன்மைப் பெற்றிருக்கின்றது. அன்றியும்,

விபலாந்யந்ய ஸாஸ்த்ராணி, விவாதஸ் தேஷுகேவலம்,
ஸபலம்ஜ்யோதிஷம்ஸாஸ்த்ரம், சந்த்ரார்கௌயத்ரஸாக்ஷிணௌ

என்ற சுலோகப்படி ஏனைய சாஸ்திரங்கள் விவாதமுடையனவென்றும் இச்சோதிட சாஸ்திரமொன்றே பிரத்தியக்ஷத்திற் கண் கூடாக காணக்கூடிய சபலத்தன்மையை வாய்க்கப் பெற்றுள்ள தென்றும் இதற்குச் சந்திர சூரியர்களே சான்று எனவும் அங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றன.

இத்தகைய மகாமகிமை வாய்க்கப்பெற்ற இச்சாஸ்திரத்தை சுத்த சாம்பிரதாயத்துடன் அறிந்துகொள்ளாமல் சோதிட சாஸ்திரத்தில் விதாயகனாகின்றானே அவன் நக்ஷத்திர சூச

கன் என்கின்ற கொடிய (மகா) பாவியென்று பூர்வாசாரியர்கள் கூறியிருக்கின்றனர். வராகமிகிரீய பிருகத் சம்மிதை 2 ம் அத்தியாயம் 17 ம் 18 ம் சுலோகங்கள்

அவிதித்வைவயஃ ஸாஸ்த்ரம், தைவஜ்ஞத்வம்ப்ரபத்யதே
ஸபம்க்த்ரிதூஷகஃ பாபோ, ஜ்ஞேயோ நக்ஷத்ர சூசகஃ
நக்ஷத்ரசூச கோத்திஷ்ட, முபஹாஸம் கரோதியஃ
ஸவ்ரஜத் யந்ததாமிஸ்ரம், ஸார்தம் ருக்ஷவிடம்பிநா.

எனக்கூறுமாற்றாலுணர்க. ஆகலின் இச்சாஸ்திரத்தை சுத்த சாம்பிரதாயமாக உணர்ந்து விதாயகனுகும் ஒருவன் சர்வ பாபங்களும் நசிக்கப்பெற்று துக்க நாசமும் சுகபிராப்தியு மெய்தி சூரியாதி கிரகலோகங்களில் வசிக்கும் பாக்கியத்தை அடைகின்றான் என ஸ்ரீ சூரியநாராயண மூர்த்தி மயனுக்கு உபதேசித்துளார். சூரிய சித்தாந்தம் உபநிஷத்தத்தியாயம்

சுலோகங்கள்

"ஏதத்தே பரமாக்யாதம், ரஹஸ்யம் பரமாத்புதம்
ப்ரஹ்மைதத் பரமம்புண்யம், ஸர்வபாப ப்ரணாஸநம்
திவ்யஞ் சார்க்ஷம க்ரஹாணஞ்ச, தர்சிதம் ஜ்ஞானமுத்தமம்
விஜ்ஞாயர்காதிலோ கேஷு, ஸ்தாநம்ப்ராப்நோதிஸாஸ்விதம்"

எனக் கூறுமாற்றானறிக, மற்றும் இச்சோதிட சாஸ்திரமானது

ஸ்கந்தத் ரயாத்மகம் ஸாஸ்த்ரம் ஆத்யம்ஸித்தாந்தஸம்ஜ்ஞிகம்
த்விதீயம் ஜாதகம் ஸ்கந்தம் த்ருதீயம ஸம்ஹிதாம்வயம்.

என்ற தைவக்ஞவிலாச சுலோகப்படியும்

ஸித்தாந்த ஸம்ஹிதா ஹோரா ரூபம்ஸ்கந்தத்ரயாத்மகம்
வேதஸ்ய நிர்மலம் சக்ஷுர்,ஜ்யோதிஃ ஸாஸ்த்ரமநுத்தமம்

என்ற நாரத சம்மிதைச் சுலோகப்படியும் கணித ஸ்கந்தம், ஜாதக ஸ்கந்தம், சம்மிதாஸ்கந்தம் எனமுப்பகுதியினையுடைத்தாகும். இவை முறையே கணிதம், பாவம், முகூர்த்தம் எனவழங்கவும் படும். இவற்றுள் கணித ஸ்கந்தம் சித்தாந்தம், தந்திரம், கரணம் என்னும் மூன்று பிரிவினையுடையதாம், சித்தாந்தத்தில் சிருஷ்டியாதி கணிதங்களும், தந்திரத்தில் யுகாதி கணிதங்களும், கரணத்தில் இஷ்ட சகவருடாதி கணிதங்களுங் கூறப்படுகின்றன. இஃது சூரிய சித்தாந்தம், ஆரியபடீயம், கரணகுதூகலம் என்னுமிவைபோன்ற நூற்களாலினிது விளங்குகின்றன, (தொடரும்)

வித்வான்-வ. கு. வேலு நாயகர்,
பாலசோதிடர், வேலப்பாடி.

இருமல்ரோகம்

இது க்ஷய இருமல், காச இருமல், உளோமாந்தை இருமல், மருந்தீட்டிருமல், கஞ்சா இருமல், மதுபான இருமல், சுர இருமல், முதலியவைகளாக சொல்லப்படுகின்றது. அவற்றுள் க்ஷய இருமலைச் சற்று ஆராய்தலுடன் அவற்றின் பலவேறு பரிகாரங்களையும் ஈண்டுவரைவாம். அதனாலீண்டுப் பீடிக்கப்படுவோர் பலராகலின்.

க்ஷயம் என்கிறசொல் க்ஷீணிப்பித்தலுடைய நோய் என்னும் பொருளதாம். அது சரீரத்தை நாளுக்குநாள் இளைப்பித்துக் கெடுத்தலின். இது அக்ஷயம் என்னும்சொல்லுக்கு எதிரி. அக்ஷயம் க்ஷீணமின்மை யென்னும் பொருட்டு. இதனை மூத்தோர் மணமக்களை வாழ்த்துங்கால் "அக்ஷயமாயிருக்க" என்பதனாலறியக்கடவர்.

இந்த ரோகமானது வாத, பித்த, சிலேஷ்மாதி காரணங்களால் பலவேறு நாமங்களைக்கொண்டு பலவகையாக இருக்கின்றன. இவைகளின் விரிவை வடமொழியில் வயித்தியசிந்தாமணி முதலிய நூற்களிலும், தென்மொழியில் ஜீவரக்ஷாமிர்தம், யூகிமுனி 800 முதலிய நூற்களிலும் பரக்கக்காண்க.

பெரும்பான்மை நம்மனோர்க்குண்டாம் ரோகங்களெல்லாம் சரீரத்தின் அகம், புறம் என்னும் இருவகைத்தான பலவுறுப்புக்களில் ஒவ்வொன்றைப் பற்றியே வருமேயன்றி இடமின்றிவாராது. ஆகலின் இந்த க்ஷயரோகமானது சரீரத்தின் அக வுறுப்புக்களில் ஒன்றாகிய நுரையீரலைப் பற்றியதேயாம். இது முக்கியமாகத் தனக்குக் கபத்தையே துணைக்காரணமாகக் கொண்டு வருதலின், அக்கபம் இலகுவாக வெளிப்படாமையால் அதனிடத்து வெப்பம் தங்கி அதனாலாங்குச் சிறு கிருமிகளுண்டாய் அக்கபத்துடன் அஃதுள்ள நுரையீரலையும் அவைகள் தங்களுக்கு உணவாகக் கொள்ளத்தலைப் படுகின்றன. அக்காலத்து நுரையீரல் சல்லடைக்கண்கள் போலாகும். இங்ஙனம் நிகழ்ந்த பிறகு அந்நோயாளி பிழைத்தலரிது. (எது போலவெனின், ஓர் மட்பாண்டத்தில் ஒரு தானியத்தைக் கொட்டி மூடிச் சிலநாள் கவனியாதிருந்தால் அத்தான்யோஷ்ணத்தாலேயே அதின் சாதி வண்டொன்றதனிடத்தே தோன்றி அதனை யழித்துக்கெடுத்து விடுதல்போலாம் என்க.) இந்நோய் இயற்கைநோய், செயற்கைநோய், பிதிரார்ச்சித நோய், என மூவகைப்படும். 1-இயற்கைநோய் என்பது தன் சரீரத்தின் திரிமலபேதத்தால் தானேயுண்டாவது. 2-செயற்கை நோயென்பது, அந்த நோயாளியுள்ள விடத்தில் அடிக்

கடி சென்று நெருங்கியிருந்து சம்பாஷித்தலினுல் அத்தூர்க் காற்றைத் தான் சுவாசிக்க வருவதினுலும், நோயாளியின் கபம் முதலிய உமிழ்கின்ற வஸ்துக்களின் நித்திய அணுக்கள் சரீரத்தில் தாக்குவதினுலும் இன்னும் பல காரணங்களாலும நோயாளியினிடத்திருந்து தொடர்வது. 3-பிதிரார்ச்சிதம் என்பது தன்னைப் பெற்றோர்கட்குண்டாயிருந்து தனக்குத் தொடர்வது.

இதற்கு நாடி

"பித்தந்தானையத்தோடு பெருமுகந்திரும்பி நின்றால்
மத்திபக்ஷய ரோகத்தை வாவென வழைக்குந்தானே"

"உற்பவித்த கபமீளை காசரோகம்
உற்றிடிலோ சிலேத்மமது மீறிக்காணும்"

"ஐயத்தில்....செய்யதோர் பின்னடந்தால் சேத்துமரோகமாகும்
பொய்யல்ல வலத்திற்காசம்" என்பவைகளால்

தமிழ் நூற்களிலும், "க்ஷயரோகிகளுக்கு நாடி இயற்கையாக ஓடுவதைப் பார்க்கிலும் அதிகவிரைவாக ஓடும்" என்று ஆங்கில நூற்களிலும் சொல்லப்படுகின்றது.

சிகித்ஸைகள்

இந்நோய்க்குப் பலவகைப் பரிகாரங்கள் சித்த பரம்பரையில் வந்தவர்களும், வயித்திய பரம்பரையில் வந்தவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றில் ஒன்றான பவளபற்பத்தையே யாமீண்டு முன்னர்க் கூறுகின்றாம். பின்னர் மற்றவை முறையே கூறப்படும். என்னையெனின்? ஒருவன் இருமலால் வருந்துவனேல் அவனைக் கண்டானொருவன் பவளம் சாப்பிடு என்பது வழக்காயிருத்தலினும்;

"சுரதோஷமையமுத் தோஷசுரங்காசம்
அருசி கிடத்தாலாமாலம்—பெருவிந்து
நட்டமதி தாகநா வரட்சிபோ மொளிவுங்
கிட்டும் பவளத்தாற்கேள்" எனக்குணபாடம் புகன்றிருத்தலினுமென்க.

பவளம் என்பது பிரவாளம் என்னும் ஆரியத்தின் சிதைவென்பர். சிலர் பவழம் எனவும் வழங்குதலின் தமிழிற்கே உரியழகரம் அதிலிருத்தலின்அப்பெயர் தமிழிற்கே உரியதென்றுங் கூறுவர்.

இப்பவழபற்பத்தைப் பல்லாசிரியர் பலவேறு விதமாகக் கூறியிருக்கின்றனர். அம்முறைகளில் முதலில் தேரையர் தாம் செய்த "மகாமகிமைக்கரிசிலில்" கூறியதையே யாமீண்டு எழுதுகின்றனம். மா. வடிவேலு முதலியார்.

ஜயவீரன்

(79-வது. பக்கத்தொடர்ச்சி)

அத்தையிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வந்த ஜயதேவன் முதன் முதல் எங்குச் செல்வது என்று யோசித்தான். "நமது தந்தை குருசாமியின் குற்ற விசாரணைக்குப் போகும் பொழுதல்லவா கொலையுண்டார்? அவர் அப்பொழுது கொலையுண்டபடியினாலே அவரைக் கொலை செய்தவர்கள் குருசாமியின் கூட்டத்தாராகவே யிருத்தல் வேண்டும். அந்தக் குருசாமி வசித்த விடமும், அவன்மீது குற்றஞ் சாட்டுதற்குக் காரணமான கொலையை அவன் நடத்தின இடமும் திண்டுக் கல்லாக இருக்கிறது. அதனால் அவன் கூட்டத்தினரும் அவ்விடத்திலேயே பெரும்பாலும் வசிக்க வேண்டியவர்களென்று நினைக்கவேண்டியதாக இருக்கிறது. இவ்வாறிருப்பதனால் திண்டுக் கல்லுக்கே முதன் முதல் செல்வோம். அவ்விடத்தில் ஏதாவது சங்கதி வெளியானாலும் வெளியாகலாம்" என்று எண்ணி நிச்சயித்துத் திண்டுக் கல்லுக்குப் புறப்பட்டுச் சென்றான்.

அவ்விடத்தில் மெதுவாக, குருசாமிசெய்த கொலையைப் பற்றி விசாரித்தான். அப்பொழுது அவ்வூரார் குருசாமி என்பவன் கள்ளர் கூட்டத்தைச் சேர்ந்தவன் எனவும், அவனைச் சேர்ந்த கள்ளர்கள் அந்தப் பிரதேசங்களிலுள்ள செல்வர்கள் வீடுகளிற் புகுந்து கொள்ளை யடித்து வருகிறார்களெனவும், அவர்களைக் கண்டு பிடிக்க ஒருவராலும் ஆகவில்லை எனவும் கூறினார்கள்.

ஜயதேவன் இப்படிப் பலரையும் விசாரித்துக் கொண்டே வந்ததில் அத்திருடர் திண்டுக் கல்லுக்கருகில் எவ்விடத்திலோ ஒளிந்திருக்கிறார்கள் என்று தீர்மானஞ் செய்யவேண்டியவனானான். திண்டுக்கல்லோ குன்றூர்; சிறு சிறு குன்றுகள் தனித்தும் பல ஒன்றாகச்சேர்ந்து முள்ளன. அந்தக் குன்றுகளினிடையிற்றான் அவர்கள் மறைந்து வாழ்தல் கூடும் என்று நிச்சயித்து அக்குன்றுகளைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான்.

சற்றும் சலிப்பின்றி ஜயதேவன் ஒவ்வொரு குன்றுகளையும் சுற்றிப்பார்த்தும் மேலேறிப் பரிசோதித்தும் வந்தான். அப்பொழுது தரை மட்டத்துக்குமேல் பத்து அல்லது பன்னிரண்டடி உயரமுள்ள ஒரு விசாலமான கற்பாறை அவன் கண்ணிற் பட்டது. அதன்மீது ஏறி, கூர்ந்து நோக்கிக் கொண்டே, அதைச்சுற்றி வந்தான். அப்படி வரும்போது அப்பாறையின் மீது ஓரிடத்தில் சற்றேறக்குறைய மூன்றங்குல கனமும் மூன்றடிச் சதுர அளவுமுள்ள கருங்கற் பலகை யொன்றிருந்தது. ஜய

வீரன் அதைக் கையால் எடுக்க முயன்றான்; முடிய வில்லை. தள்ளிப்பார்த்தான்; தள்ளவும் முடியவில்லை. எடுக்கவும் தள்ளவும் முடியாமற் போகவும் அவன், "இந்தக் கருங்கற் பலகை பாறையோடு சேர்ந்ததாகக் காணப்படவில்லையே! இது தனிப்பலகையாகவே காணப்படுகிறது. அப்படியிருந்தும் இதை அசைக்க என்றால் முடிய வில்லையே! இதை அசைப்ப தற்குக் கூட எனக்குச் சக்தி இல்லாமலாபோயிற்று? இதில் ஏதோ சூதிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க வேண்டும் கண்டு பிடியாமல் இவ்விடத்தை விட்டு யான் நகர்வதில்லை." என்று தனக்குள் சொல்லிக் கொண்டு, அக்கல்லின் மேலேறி நின்று, அப்பாறையின் மேற் பரப்பைக் கவனமாய்ப் பார்த்தான். பார்த்த அவன் கண்களுக்கு, சிறிது தூரத்தில் ஒரு சிறு தேங்காயின் அளவுள்ள வெள்ளைக் கல்லொன்று இருப்பது புலனாயிற்று. புலனாகவும் ஜயவீரன் அவ்விடத்திற்குச் சென்று, அக்கல்லை எடுக்கப்பார்த்தான். அது அசையவில்லை. இவ்வளவு சிறிய கல்லைப் பெயர்த்தெடுக்க முடியாத காரணம் யாதாயிருக்கலா மென்று யோசித்துக் கொண்டே, அதைத் திருகிப் பார்த்தான்; அது சுழன்றது. ஆயினும் அதைப் பாறையை விட்டுத் தனியே வெளியில் எடுக்கமுடியவில்லை. அதனால் பலமுறை அதைத் திருகினான் அப்படித்திருகிக் கொண்டே சதுரக்கற் பலகையைப் பார்த்தான். அது தன்னிடம் விட்டுப் பெயர்வதாகத் தெரிய வந்தது. உடனே அவன் சிறுகல்லைச் சுழற்றுவதை விட்டுச் சதுரக்கல்லண்டை வந்தான். என்ன ஆச்சரியம்! அச்சதுரக்கல் இடம் விட்டுப் பெயர்ந்திருப்பதாகத் தெரிய வந்ததல்லாமல், அக்கற்பலகை யிருந்தவிடத்தில் சுரங்கவழி யொன்றிருப்பதும் தெரிய வந்தது.

ஜயவீரன், அத்திறப்பின் வழியாகக்கீழே எட்டிப்பார்த்தான் ஒரே இருளாக இருந்தது. அவன் திறப்பின் ஓரத்தில்நின்று பார்த்துக்கொண் டிருந்தபடியால், கால்தவறி உள்ளேவிழுந்து விட்டான். அச்சுரங்கம் மிகவும் ஆழம் படைத்ததாக இருந்த படியால், ஜயவீரன் விழுந்த வேகத்தில் மூர்ச்சையானான்.

இரண்டாம் அத்தியாயம்

வாலிபனுக் குற்ற விபத்து

இரவு மணி ஒன்றிருக்கும். ஆகாயத்தில் சந்திரன் தன் பதினாறு கலைகளுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஜயவீரன் விழுந்துள்ள சுரங்கப் பாறையின் மீது இருவர் ஏறி, அச்சுரங்கவாயில் நோக்கிநடந்தார்கள். அவர்களி லொருவன்தலையில் ஒரு பெரிய மூட்டையிருந்தது; மற்ற

வன்கையில்ஒருகோலிருந்தது. கோலென்ற அளவில்அது துலாக்கோலாக விருக்குமோ, அளவு கோலாக இருக்குமோ, கன்னக் கோலாக இருக்குமோ, கத்திரிக் கோலாக இருக்குமோ, மாத்திரைக் கோலாக இருக்குமோ, அஞ்சனக் கோலாக இருக்குமோ மரக்கோலாக இருக்குமோ அல்லது முத்திரைக் கோலாக இருக்குமோ என்றெண்ணிவிடவேண்டாம்; அவன் கையிலிருந்தது தடிக் கோலே. அதை அந்தத் தடிப்பையல் வேடிக்கையாகச் சுழற்றிக் கொண்டே போனான்.

இருவரும் இப்படிப் பாறையின் மீது நடக்கையில் மூட்டையுடனிருப்பவன், "அண்ணே! என்ன கனமடா கனக்கிறது!" என்று சொன்னான்.

"ஆ மாபடா, இந்தச்சனி. கஷ்டப் படாமல் எந்த வேலை ஆகுது? பாதிதூரம் தூக்கிவந்ததே எனக்குப் போதும் போதும் எண்ணு ஆய்போச்சே! இன்னம் கழுத்து வலிக்குதே! எனக்குத் தெரியாதா அந்தக் கஷ்டம்? கொஞ்சம் பொறுத்துக்கொ', வந்துவிட்டோம்" என்றான் தடியுடனிருந்த தடியன்.

இவ்விதமாகப்பேசிக் கொண்டே இருவரும் சுரங்கத்தின் வாயிலை யடைய நடக்கையில், "மாமுண்டி, நம்ம ஆண்டை இன்'க்கு ரொம்ப கொண்டாட்டமாக இருப்பான்'டா. மதுராந்தகத்து ஆசாமிகளும் இன்'க்கு வந்து சேர்'ருங்களாமே. மாரி என்னமோ துள்'ளுறானே; என்னசங்கதி தெரியுமா? அவன்தான் எல்லாம் வெட்டி விட்டானும், என்று தடியுடன் நடந்த முனியன் சொன்னான்.

மூட்டையுடனிருந்த மாமுண்டி, "முனியண்ணே, நீயும் மாரியோடு கூட போ' வில்லையோ? நீ சும்மா கல்லாட்டமா இருந்தா'? நீ ஒன்'ம் வேலை செய்ய'ல்லையோ? அவன் மாத்திரமா ஒன்' கூடவைக்காதே வெட்டி'ட்டான்? அவன் மாத்திரம் அவ்'ளவு வேலைக்'ரனே?" என்று கேட்டான்.

அப்பொழுது முனியன், "மாமுண்டி, அவ'வாயாடி ஆசாமி. அவன் தன'கு தெரிந்த அளப்,லாம் அளக், றதிலே எல்லாம்நம்பு'ருங்க'. நான்'ல்லவோ அந்தமாதேவனை தீ'த்து விட்டவன்? ஒரே அடிலே ஆளை தீ'த்து விட்டனே. அப்படிச் செய்து'ட்டும் பிர'சனமி'லே. குருசாமி மீள'லையே! அந்த மடையன் முட்டா'தனமாக மாட்டிக்'ண்டான்" என்று சொன்னான்.

அதைக்கேட்ட மாமுண்டி, "இப்பொ' நம்பவன் என்ன பண்ணப் போர'ருனும்? என்று கேட்டான்.

"இன்'க்கு ஒரு'டத்திலே நல்ல சில்'றை இருக்'றது. நமக்கும் தெசை இருந்தால் பங்குவரும். இல்லா'ட்டால்

இல்லை. சீக்கிரம் நட; நேரம் ஆகிறது," என்று சொன்னான் முனியன்.

மாமுண்டி வெகுசிரமத்துடன் வாயில் அடைந்தான். அடைந்ததும், "முனியண்ணே, நமக்கு முன்னே யாரோ ஆசாமி உள்ளே போயிருக்கிறான். கதவு திறந்திருக்கிறது பார்!" என்றான்.

"ஆம், ஆம். யாராவது நம்மைப் பிடிக்கக் காத்திருப்பார்களோ? இருந்தாலும் ஜாக்கிரதையாக உள்ளே நுழைவோம். உள்ளே ஒருத்தரும் இராது என்று நினைக்கிறேன்," என்றான் முனியன்.

"எல்லாம் சரிதான்; நூலேணியை எடு. உள்ளே நுழைந்து பார்ப்போம். என்ன வந்தாலும் வரட்டும்," என்றான் மாமுண்டி.

முனியன் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு நூலேணியை யெடுத்து, அதன் முனை யொன்றை சுரங்க வாயின் ஓரத்தில் வெளியே புலனாகாதபடி அறைந்து வைத்திருந்த ஒரு கொக்கியில் மாட்டித் தொங்கவிட்டு விட்டு, "மாமுண்டி, நீ மூட்டையை உள்ளே எறிந்து விடு, பிறகு நாம் இறங்கலாம்," என்று சொன்னான்.

மாமுண்டி நின்றபடியே தலையிலிருந்த மூட்டையைத் திறப்பின் வழியாகச் சுரங்கத்தினுள்ளே போட்டான். பிறகு அவர்களிருவரும் நூலேணிவழியாக இறங்க யத்தனித்தார்கள்.

அவர்கள் இறங்கி உள்ளே செல்வதன் முன், சுரங்கத்தில் அன்று மாலை விழுந்த ஜயவீரன் எவ்வாறானான் என்பதைச் சற்று விசாரிப்போம்.

விழுந்த அதிர்ச்சியால் அடைந்த மூர்ச்சை தெளிய அவனுக்கு நாலைந்து மணிநேரமாயிற்று. மூர்ச்சை தெளிந்ததும் அவனெழுந்து நாலு பக்கமும் பார்த்தான். எங்கும் ஒரே இருளாக இருந்தது. "இவ்விடம் அந்தக் கூட்டத்தாருடைய மறைவிடமாக இருக்கலாமோ," என்று யோசித்தான். எவ்வாறாயினும் ஏதேனும் வெளிச்சம் தெரிகிறவரையில் அவ்விடத்தை விட்டுத் தப்புவது முடியாதென்று அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது; மெல்ல மெல்லக் கையால் தடவிப் பார்த்துக்கொண்டே ஒரு சுவரின் ஓரமாகச் சென்று படுத்தான். மேலிருந்து கீழே விழுந்ததாலுண்டான உடம்புவலி அவனுக்கு முற்றும் நீங்காதிருந்தபடியால் வெளிச்சம் கண்ணிற்படும் வரையில் சற்று உறங்குவோமென்று எண்ணினான்.

சி. சோமசுந்தரம் பிள்ளை.

சங்க நூல்

(65-வது பக்கத்தொடர்ச்சி)

எட்டாவதாகிய குறிஞ்சிப்பாட்டு கபிலர் பாடியது. இது ஆரிய வரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்பொருட்டுப் பாடியது. 261-அடிகளை யுடையது இதினின்று சில அடிகளை அடியிற் காண்க.

"அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு
முட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
யிருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறலிற் பழியு முண்டோ
வாயிற்றின் வாரா ராயினு மாற்ற
வேனையுலகத்து மியைவதா னமக்கென"

குறிஞ்சிப்பாட்டு.

பத்தாவதாகிய மலைபடுகடாம்; இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது. இதனாற் பாடப்பட்டவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்

னன்சேய் நன்னன். இது 583-அடிகளை யுடையது இதினின்று சில அடிகளை அடியிற் காண்க.

“ திருமழை தலைஇய விருணிற விசும்பின்
   விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்து;
திண்வார் விசித்த முழவொடாகுளி
   நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டின்
மின்னிரும் பீலி யணிதழைக் கோட்டொடு”

இப்பத்துப் பாட்டைப் பாடினார் எண்மர். அவராவார்: (1) நக்கீரனார், (2) முடத்தாமக் கண்ணியார், (3) இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், (4) உருத்திரங் கண்ணனார், (5) காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார்-நப்பூதனார், (6) மாங்குடிமருதனார், (7) கபிலர், (8) இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்க் கௌசிகனார் என்பார்.

இவற்றாற் பாடப்பட்டார் அறுவர். அவராவார் (1) முருகவேள், (2) சோழன் கரிகாற் பெருவளத்தான், (3) ஏறுமாநாட்டு நல்லியக்கோடன், (4) தொண்டைமான் இளந்திரையன், (5) தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், (6) பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன்சேய் நன்னன் என்பார்.

இவருள் சோழன் காரிகற்பெருவளத்தானை இப்பத்துப் பாட்டினுள் முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப் படையானும், உருத்திரங் கண்ணனார் பட்டினப்பாலையானும் பாடினர். இவருள் உருத்திரங் கண்ணனார் பெரும்பாணாற்றுப் படையால் தொண்டைமான் இளந்திரையனையும் பாடினார்.

தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன்நெடுஞ் செழியனை மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியினும், நக்கீரனார். நெடுநல்வாடையினும் பாடினார்.

இவற்றுள் நெடுநல்வாடையில் இப்பாண்டியன் பெயர் தலையாலங்கானத்துச் செருவென்ற என்னும் அடையின்றிப் பாண்டியன் நெடுஞ் செழியன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இஃது ஆய்தற்குரியது. இப்புலவருள் நக்கீரனார் திருமுருகாற்றுப் படையான் முருகவேளையும் பாடினார். (இது கடவுளைப் பற்றியதாகலின் காலவாராய்ச்சிக்கு உதவுவதன்று.) (இன்னும்வரும்)

கா. ரா. கோவிந்தராஜ முதலியார்,
பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
சென்னை.

[மிஸ்டர் ஜஸ்டிஸ் கௌட்ஸ்டிராட்டர் முன்பாக.]

பிரஞ்சு கவரன்மெண்டாரின் சட்டம்.

தர்ம சொத்துக்களைப் பற்றி.

சென்ற மாதத்தில் புதுச்சேரியிலுள்ள சில தர்ம சொத்துக்களைப் பரிசீலனைசெய்து காப்பாற்றும் நிமித்தம், தர்மகர்த்தாக்களுக்குள் உண்டான அதிகாரத்தைப்பற்றித் தம் அபிப்பிராயத்தை வெளியிடும்படியாய் புல்பெஞ்சினால் ரெப்பர் செய்யப்பட்டவியாஜ்ஜியத்தில் (7-2-18.) தினம் பிற்பகலில் தீர்ப்புச் சொல்லப்பட்டது. அதாவது தர்மம் செய்யும் படியாய்ப்புதுச்சேரியில் ஸ்தாபிக்கப்பட்ட சில அசையாப் பொருள்களைத் தர்மகர்த்தாக்கள் பிரஞ்சு கவர்ன்மெண்டாருடைய அனுமதியின்றி தர்மம் வினியோகப்படுத்தக் கூடுமா என்கிற அம்சம். ஜட்ஜ் புதுச்சேரியில் பிரஞ்சுக்காரர்களுக்குள் விளங்கும் சட்டங்களைப்பரிசீலனைசெய்து, சில சாக்ஷிகளையும் விசாரித்தபிறகு தான் சொல்லிய தீர்ப்பில் புதுச்சேரியில் தர்ம விஷயத்துக்காக ஸ்தாபிக்கப்பட்ட சொத்துக்களைப் பிரஞ்சி கவர்ன்மெண்டார் உத்திரவன்றி தர்மம் வினியோகப்படுத்தத் தர்ம்மகர்த்தாக்களுக்கு அதிகாரமில்லையென்று தம் அபிப்பிராயத்தை வெளியிட்டதுமன்றி புதுச்சேரியிலுள்ள தர்ம்ம சொத்துக்களைப்பற்றிப்பரிபாலனம் செய்ய நியமிக்கப்பட்ட தர்ம்மகர்த்தாக்களை வேலையிலிருந்து நிவர்த்தி செய்ய இங்கிலீஷ் கோர்ட்டுகளில் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடு மென்றும் அபிப்பிராயப் பட்டார்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்

மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் இவர்கள் முன்பாக.]

ஒரு ஜட்ஜியின்தீர்ப்பே காயம்.

நாகப்பட்டணம் டிஸ்ட்ரிக்டு முனிசிப்கோர்ட்டில் ஆரம்பத்தில் சில சொத்துக்களை பெற்றுக்கொள்ள ஒரு அசல் வியாஜ்யம் வாதியால் கொண்டு வரப்பட்டிருந்தது. கேஸ்விசாரணை செய்து பைசல் செய்யப்படும் முன் பிரதிவாதிகள் வியாஜ்ய சொத்துக்களின் விலை அதிகமாய் குறைக்கப் பட்டிருக்கிறபடியால் முன்சிப்கோர்ட்டாருக்கு வியாஜ்யத்தைப் பிடித்து விசாரணைசெய்ய அதிகாரமில்லை யென்று ஆக்ஷேபனை செய்ததின் பேரில் முனிசிப் வாதிகள் அதிக விலையுள்ள சொத்துக்களை நீக்கிவிட்டுச் சட்டப்படியான வியாஜ்யம் கொண்டு வந்தால் பிடித்துக் கொள்ளுவோ மென்றும் இந்த கேஸை வாதி வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டியதென்றும் உத்தரவுசெய்தார். இதேபிரகாரம் வாதி கேஸை மாற்றிக்கொண்டு முனிசிப் கோர்ட்டார் விசாரித்துத் தீர்ப்புச் செய்யும்படி அதிகாரமுள்ளதாய்ச் சொத்துக்களை குறைந்த விலைக்கு மதித்து வியாஜ்யம் மறுபடியும் தாக்கல் செய்தார். இதை ஆக்ஷேபனை செய்து, பிரதிவாதிகள் ஹைகோர்ட்டு பரிசீலனை மனு தாக்கல் செய்ய, ரிவிஷன் கேஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்ரஹிம் முன் விசாரணை செய்யப்பட்டது. ஜட்ஜி முனிசிப்பின் உத்தரவை மாற்றி விட்டதுமன்றி, அவர் வாதிக்குமறுபடியும் வியாஜ்யம் கொண்டுவரும்படி உத்தரவளித்தது சட்ட விரோதமென்று தமது அபிப்பிராயத்தையும் வெளியிட்டார்.

இந்தத் தீர்ப்பை மாற்றி முனிசிப்பின் தீர்ப்பைக்காயப்படுத்தும்படி வாதி லெட்டர்ஸ் பேடண்ட் அப்பீல் செய்து கொள்ள ஜட்ஜிகள் ஏகோபித்து மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்ரஹிம் தீர்ப்பையேஆமோதித்து அப்பீலைத் தள்ளி விட்டார்கள். (7-2-18.)